# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## STC. No.107/2022 P.W.9

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சரவணமுத்து | த-பெ | தங்கமுத்து |
| ஊர்: | : | மதுரை | | |
| வயது: | : | 56/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | மருத்துவர் | மாவட்டம் | மதுரை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **29.04.2026.**

**எதிரிகள் ஆஜர்.**

--------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் மதுரையில் வசித்து மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் எலும்பு முறிவு விபத்து சிகிச்சை பிரிவில் மருத்துவராக பணி செய்து வருகிறேன். இந்த வழக்கின் மருத்துவர் பாண்டியராஜன் என்பவர் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் 2020 ம் வருடம் மருத்துவ ஆலோசகராக பணியில் இருந்தார், அவர் அதன் பிறகு இறந்து விட்டார். இவ்வழக்கில் அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கினங்க எதிரி தரப்பில் ஆட்சேபனையின்றி நீதிமன்ற அனுமதியுடன் அவரது கையொப்பம் தெரிந்த நான் ஆவணங்களின் அடிப்படையில் மருத்துவ சாட்சியம் அளிக்கிறேன்.

மேற்படி மருத்துவர் 2020 ம் வருடம் பணியில் இருந்த போது 11.01.2020 அன்று இரவு 9.40 மணிக்கு திரு.கிருஷ்ணன் வயது 63 என்பவர் சாலை விபத்தில் காயமுற்று முதலில் தனியார் மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை பெறப்பட்டு மேல் சிகிச்சைக்காக எங்களது மருத்துவ மனைக்கு அழைத்து வரப்பட்டார். அவருக்கு தேவையான பரிசோதனைகள் செய்யப்பட்டுது. மேலும் நுண் கதிர் படங்கள் எடுக்கப்பட்டது. அவருக்கு கீழ் கண்ட காயங்கள் தென்பட்டது.

1) வலது முழங்கால் பகுதியில் 3 x 2 செ.மீ அளவில் சிதைந்த காயம்

2) வலது கால் பகுதியில் 10 x 6 செ.மீ அளவில் சிதைந்த காயம்.

3) வலது கை பகுதியில் துளை போன்ற காயம்

4) வலது கால் பகுதியில் தோல் சதை 10 x 6 செமீ அளவில் பிஞ்சு போன நிலையில் இருந்தது

5) வலது முகப்பகுதியில் எலும்பு முறிவுடன் கூடிய வீக்கம் இருந்தது.

இதில் காயங்கள் 1 மற்றும் 2 ஆகியவை சாதாரண காயம் என்றும் காயங்கள் 3, 4 மற்றும் 5 ஆகியவை கொடுங்காயங்கள் என்றும் சான்று வழங்கியுள்ளார். **காய சான்றிதழ் அசாஆ 4**.

**குறுக்கு விசாரணை**

விபத்தில் காயம்பட்ட நபருக்கு காரைக்குடி தனியார் காவேரி மருத்துவமனையில் முதல்

உதவி சிகிச்சை அளிக்கப்பட்டது என்றால் சரிதான். மேல் சிகிக்கைக்காக மீனாட்சி மிஷின் மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார் என்றால் சரிதான். விபத்தில் காயம்பட்ட கிருஷ்ணன் என்பவருக்கு உரிய காயங்களான வலது முழங்கால், வலது கால், வலது கை, வலது கால் பாதம், தோல் சதை, வலது முகம் காயங்களில் 1, 2 காயங்கள் சாதாரணமாக ஒரு நபர் இருசக்கர வாகனத்தில்செல்லும போது நிலை தடுமாறி தலை குப்புற விழும்போது ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். 3 வது காயமானது ஒரு நபர் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது தடுமாறி விழும்போது வலது கையை ஊன்றும்போது கூர்மையான ஆணி கூர்மையான பொருட்கள் மீது பட்டால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. வலது முகம், வலது பாதம் ஆகியவைகளில் ஏற்பட்ட வீக்க காயம் ஒரு நபர் இருசக்கர வாகனத்தில் செல்லும் போது தலைக்குப்புற விழும்போது ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.05.05 16:52:48 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.